

தேவாரம்

(தமிழ் மந்திரம்)



தேவாரம்

(தமிழ் மந்திரம்)

பாராயணத் தொகுப்பு

டாக்டர் ரெ. முத்துக்கணேசனார்
காரைக்குடி

விய - புரட்டாசி - 11
27-09-2006

இலக்கியக் கழகம்
காரைக்குடி

 2-2

முன்னுரை

தமிழகத்தில், தமிழர்களாகிய நமக்கு உரிய மந்திர மொழி தேவாரத் திருப்பாடல்களாகும். கி.பி. ஏழாம் நூற்றாண்டில், திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் தோன்றினார்கள். கி.பி எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சுந்தரர் தோன்றினார், இவ்அருளாளர்கள் மூவரும் ஊர்கள் தோறும் சென்று சிவ நெறியைப் பரப்பினர்; சிவன் புகழைப் போற்றினர்; பண்முறையில் பாடல்களைப் பாடினர். இவர்கள் தம் பாடல்கள் தெய்வ வழிபாட்டு மந்திரங்களாயின "தேவாரம்" என்ற பெயரினைப் பெற்றது. நாம் தெய்வ வழிபாடு செய்யும் பொழுது, தமிழ் மந்திரமாகிய தேவாரப்பாடல்களைச் சொல்லியே வழிபாடு செய்யவேண்டும். எந்தத் தெய்வ வடிவங்களுக்கு முன் வழிபாடு செய்ய முற்பட்டாலும், முதலில் தேவாரப் பாடல் ஒன்றைச் சொல்லிப் பின் அவ்வடிவங்களுக்குரிய பாடல்களைச் சொல்லித் துதிக்கும் அமைப்பை நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

அக்காலத்தில், மிகப்பெரிய ஆலயங்களில், எல்லாம் தேவார மந்திரங்களைக் கூறியே அருச்சனை செய்து வந்தனர். காலப்போக்கில், நாம் அத்தகைய மரபுச் செல்வத்தை இழந்துவிட்டோம். தம்முடைய வீட்டில் சமயச் சடங்கு நிகழ்த்தும் காலங்களில், தேவார மந்திரங்களை ஒலித்தே சடங்குகளைச் செய்தனர் தமிழ்மக்கள்; பின் அதனையும் இன்று நாம் கைவிட்டு நிற்கிறோம்.

இனியாகிலும் நம்முடைய வாழ்வில், தமிழ் மந்திரமாகிய தேவாரத்தைச் சொல்லித் துதிக்கும் அமைப்பை எற்படுத்தி நலம் பெறுவோமாக!

தேவாரமாகிய தமிழ் மந்திரம் அதனைப் பயில்வாருக்கு கவசமாக நின்று அவர்களைக் காக்கின்றது; வருகின்ற துன்பத்தைத் துடைத்து இடர்களைப் போக்குகின்றது; பொன்னையும் மெய்ப்பொருட்களையும் தந்து புரக்கின்றது; இறைதிரு அருளைக் கூட்டுவிக்கின்றது; இந்த வகையில், மூவர் அருளிய தேவாரத் தமிழ் மந்திரங்களைப் போற்றி நாம் நன்மை அடைவோமாக!

மேலே கண்டவகையில், நாம் நன்மைகளை அடைய எளிதாக, ஏற்புடைத் திருப்பதிகங்களைத் தேர்ந்தெடுத்து இப்பாராயணத் தொகுப்பில் தொகுத்துத் தந்துள்ளோம். தமிழ்ப் பெருமக்கள் இத்தொகுப்புத் திருப்பதிகங்களை, காதலாகி, கசிந்து ஓதிப் பாராயணம் செய்து இறைஅருளைப் பெறுவார்களாக!

நன்றி! வாழ்க!

டாக்டர் ரெ. முத்துக்கணேசன்
தலைவர்
இலக்கியக்கழகம்
காரைக்குடி

பொருள்

திருப்பதிகம் பக்கம்

திருமுறை வாழ்த்து

திருக்கோயிற் கலையழகைத்
தெளிவடையார் மருள்நீக்கும்
அருள்வி ளக்கைப்

பெருக்கோடும் புனல்முதலாம்
ஐம்பூதப் பெற்றிகொளும்
அறிவுப் பேற்றை

மருக்கோல மலர்மணத்தை
மந்திரத்தைத் தெய்வீக
மாலை தன்னைத்

திருக்கோல இசையமுதைச்
சிவமாக்கும் திருமுறையைப்
போற்றிச் செய்வோம்.

டாக்டர் ரெ.மு.
ஞானத்தமிழ்: 1970

திருஞான சம்பந்தர்

கண்கலங்கி அழுதலுமே கலையரசர்
    கருணையினால் ஞானப் பாலும்
பண்குலுங்கும் இசைத்தமிழும் படிக்காசும்
    படைத்தருளப் பெற்ற வன்காண்;
மண்துலங்கச் சைவத்தின் மணந்துலங்க
    வல்லமணர் வலிய டக்கி
எண்விளங்க மாலையணி இசைஞான
    சம்பந்தன் இருதாள் போற்றி!

- கவிச்செம்மல் ரெ.மு.

நமச்சிவாயத் திருப்பதிகம்
திருச்சிற்றம்பலம்
பண்-கௌசிகம்

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொருள் ஆவது
நாதன் நாமம் நமச்சி வாயவே 1

நம்பு வாரவர் நாவின் நவிற்றினால்
வம்பு நாண்மலர் வார்மது ஒப்பது
செம்பொ னார்தில கம்உல குக்கெலாம்
நம்பன் நாமம் நமச்சிவாயவே 2

நெக்கு ளார்வ மிகப்பெரு கின்நினைந்து
அக்கு மாலையொடு அங்கையில் எண்ணுவார்
தக்க வானவ ராத்தகு விப்பது
நக்கன் நாமம் நமச்சி வாயவே 3

இயமன் தூதரும் அஞ்சுவர் இன்சொலால்
நயம்வந்து ஓதவல் லார்தமை நண்ணினால்
நியமந் தான்நினை வார்க்குஇனி யான்நெற்றி
நயனன் நாமம் நமச்சி வாயவே. 4

கொல்வா ரேனும் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனும் இயம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையும் நீங்குவர் என்பரால்
நல்லார் நாமம் நமச்சி வாயவே. 5

மந்த ரம்மன பாவங்கள் மேவிய
பந்த னையவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமும் மல்குமால்
நந்தி நாமம் நமச்சி வாயவே. 6

நரகம் ஏழ்புக நாடின ராயினும்
உரைசெய் வாயினர் ஆயினும் உருத்திரர்
விரவி யேபுகு வித்திடும் என்பரால்
வரதன் நாமம் நமச்சி வாயவே. 7

இலங்கை மன்னன் எடுத்த அடுக்கல்மேல்
தலங்கொள் கால்விரல் சங்கரன் ஊன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவன் உய்வகை
நலங்கொள் நாமம் நமச்சி வாயவே. 8

போதன் போதன கண்ணனும் அண்ணல்தன்
பாதந் தான்முடி தேடிய பண்பராய்
யாதும் காண்பரி தாகி அலந்தவர்
ஓதும் நாமம் நமச்சி வாயவே. 9

கஞ்சி மண்டையர் கையிலுண் கையர்கள்
வெஞ்சொல் மிண்டர் விரவிலர் என்பரால்
விஞ்சை அண்டர்கள் வேண்ட அமுதுசெய்
நஞ்சுண் கண்டன் நமச்சி வாயவே. 10

நந்தி நாமம் நமச்சிவா யவெனும்
சந்தை யாற்றமிழ் ஞானசம் பந்தன்சொல்
சிந்தை யால்மகிழ்ந் தேத்தவல் லாரெலாம்
பந்த பாசம் அறுக்கவல் லார்களே. 11

திருச்சிற்றம்பலம்

திருநீற்றுத் திருப்பதிகம்

(திரு ஆலவாய்)

திருச்சிற்றம்பலம்

பண்-காந்தாரம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான்திரு நீறே 1

வேதத்தில் உள்ளதுநீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதம் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தருவது நீறு உண்மையில் உள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திரு ஆல வாயான் திரு நீறே 2

முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருஆல வாயான் திரு நீறே 3

காண இனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி அணிபவர்க்கு எல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருஆல வாயான் திருநீறே 4

பூச இனியது நீறு புண்ணியம் ஆவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத் தோர்களுக்கு எல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம் அதாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருஆல வாயான் திருநீறே 5

அருத்தம் அதாவது நீறு அவலம் அறுப்பது நீறு
வருத்தம் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு
பொருத்தம் அதாவது நீறு புண்ணியர் பூசும்வெண் ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருஆல வாயான் திருநீறே 6

எயிலது அட்டது நீறு இருமைக்கும் உள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கியம் ஆவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம் அதாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத்து ஆல வாயான் திருநீறே 7

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவணம் ஆவது நீறு பாவம் அறுப்பது நீறு
தராவணம் ஆவது நீறு தத்துவம் ஆவது நீறு
அராவணங் குந்திரு மேனி ஆலவாயான் திருநீறே 8

மாலொடு அயன்அறி யாத வண்ணமும் உள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏல உடம்பு இடர் தீர்க்கும் இன்பம் தருவது நீறு
ஆலம்அது உண்ட மிடற்றுஎம் ஆல வாயான் திருநீறே 9

குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண்திகைப் பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்திசைப் பட்ட பொருளார் ஏத்தும் தகையது நீறு
அண்டத் தவர்பணிந்து ஏத்தும் ஆலவாயான் திருநீறே 10

ஆற்றல் அடல்விடை ஏறும் ஆலவா யான்திரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்னன் உடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே 11

திருச்சிற்றம்பலம்

இடர்களைத் திருப்பதிகம்

(திருநெடுங்களம்)

திருச்சிற்றம்பலம்

பண்-பழந்தகராகம்

மறையுடையாய் தோல்உடையாய் வார்சடைமேல் வளரும்
பிறையுடையாய் பிஞ்ஞகனே யென்றுஉனைப்பே சினல்லால்
குறையுடையார் குற்றம் ஓராய் கொள்கையினால் உயர்ந்த
நிறையுடையார் இடர்களையாய் நெடுங்களமே யவனே 1

கனைத்தெழுந்த வெண் திரைசூழ் கடலிடைநஞ் சுதன்னைத்
தினைத்தனயா மிடற்றில்வைத்த திருந்தியதேவ நின்னை
மனத்தகத்தோர் பாடல் ஆடல் பேணிஇராப் பகலும்
நினைத்து எழுவார் இடர்களையாய் நெடுங்களமே யவனே 2

நின்அடியே வழிபடுவான் நிமலாநினைக்கருத
என்அடியான் உயிரைவவ்வேல் என்றுஅடல் கூற்று உதைத்த
பொன்னடியே பரவிநாளும் பூவொடுநீர் சுமக்கும்
நின்அடியார் இடர்களையாய் நெடுங்களமே யவனே 3

மலைபுரிந்த மன்னவன்தன் மகளைஓர்பால் மகிழந்தாய்
அலைபுரிந்த கங்கைதங்கும் அவிர்சடையா ரூரா
தலைபுரிந்த பலிமகிழ்வாய் தலைவ நின்தாள் நிழற்கீழ்
நிலைபுரிந்தார் இடர்களையாய் நெடுங்களமே யவனே 4

பாங்கினல்லார் படிமஞ்செய்வார் பாரிடமும் பலிசேர்
தூங்கினல்லார் பாடலோடு தொழுகழலே வணங்கித்
தாங்கிநில்லா அன்பினோடும் தலைவ நின்தாள் நிழற்கீழ்
நீங்கிநில்லார் இடர்களையாய் நெழுங்களமே யவனே 5

விருந்தனாகிப் பாலனாகி வேதம்ஓர் நான்கு உணர்ந்து
கருத்தனாகிக் கங்கையாளைக் கமல்சடைமேல் கரந்தாய்
அருத்தன்ஆய ஆதிதேவன் அடியிணையே பரவும்
நிருத்தர்கீதர் இடர்களையாய் நெடுங்களமே யவனே 6

கூறுகொண்டாய் மூன்றும்ஒன்றாக் கூட்டிஓர் வெம்கணையால்
மாறுகொண்டார் புரம்எரித்த மன்னவனே கொடிமேல்
ஏறுகொண்டாய் சாந்தம் ஈதென்று எம்பெருமான் அணிந்த
நீறுகொண்டார் இடர்களையாய் நெடுங்களமே யவனே 7

குன்றின்உச்சி மேல்விளங்கும் கொடிமதில்சூழ் இலங்கை
அன்றிநின்ற அரக்கர்கோனை அருவரைக்கீழ் அடர்த்தாய்
என்றுநல்ல வாய்மொழியால் ஏத்திஇராப் பகலும்
நின்றுநைவார் இடர்களையாய் நெடுங்களமே யவனே 8

வேழவெண்கொம்பு ஒசித்தமாலும் விளங்கியநான் முகனும்
சூழ எங்கும் நேடஆங்கோர் சோதியுளா கிநின்றாய்
கேழல் வெண்கொம்பு அணிந்தபெம்மான் கேடுஇலாப் பொன்அடியின்
நீழல்வாழ்வார் இடர்களைாய் நெடுங்களமே யவனே 9

வெஞ்சொல்தஞ்சொல் ஆக்கிநின்ற வேடம்இலாச் சமணும்
தஞ்சமில்லாச் சாக்கியவரும் தத்துவம்ஒன்று அறியார்
துஞ்சல்இல்லா வாய்மொழியால் தோத்திரநின் அடியே
நெஞ்சில் வைப்பார் இடர்களையாய் நெடுங்களமே யவனே 10

நீடவல்ல வார்சடையான் மேயநெடுங் களத்தைச்
சேடர்வாழு மாமறுகில் சிரபுரக்கோன் நலத்தால்
நாடவல்ல பனுவல்மாலை ஞானசம்பந்தன் சொன்ன
பாடல்பத்தும் பாடவல்லார் பாவம்ப றையுமே 11

திருச்சிற்றம்பலம்

திருநீலகண்டத் திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

பண் வியாழக்குறிஞ்சி

அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பதும் உந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம் பிரான் கழல்போற்றுதும் நாம் அடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப் பெறாதிரு நீலகண்டம் 1

காவினையிட்டுங் குளம்பல தொட்டுங் கனிமனத்தால்
ஏவினை யால்எயில் மூன்றெரித் தீரென் றிருபொழுதும்
பூவினைக் கொய்துமலரடி போற்றுதும் நாம் அடியோம்
தீவினை வந்தெமைத் தீண்டப்பெ றாதிரு நீலகண்டம் 2

முலைத்த டம்மூழ்கிய போகங்களும்மற் றெவையும் எல்லாம்
விலைத்தலை யாவெணங் கொண்டுஎமை யாண்டவிரிசடையீர்
இலைத்தலைச் சூலமும் தண்டும்மழுவும் இவையுடையீர்
சிலைத்தெமைத் தீவினை தீண்டப்பெறாதிரு நீலகண்டம் 3

விண்ணுலகு ஆள்கின்ற விச்சா தரர்களும் வேதியரும்
புண்ணிய ரென்றிரு போதுந் தொழப்படும் புண்ணியரே
கண்ணிமை யாதன மூன்றுடையீர், உம்கழல் அடைந்தோம்
திண்ணிய தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம் 4

மற்றிணை யில்லா மலைதிரண்டன்னதிண் தோளுடையீர்
சிற்றெம்மை ஆட்கொண்டுகேளாதொழிவதுந்தன்மைகொல்லோ
சொற்றுணை வாழ்க்கை துறந்துந் திருவடி யேஅடைந்தோம்
செற்றெமைத் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம் 5

மறக்கும் மனத்தினை மாற்றிஎம் ஆவியை வற்புறுத்திப்
பிறப்பில் பெருமான் திருத்தடிக் கீழ்பிழை யாதவண்ணம்
பறித்த மலர்கொடு வந்துமை ஏத்தும் பணிஅடியோம்
சிறப்பிலித் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம் 6

கருமை களித்திட்டு வாழ்க்கை கடிந்துங் கழலடிக்கே
உருகி மலர்கொடு வந்துமை ஏத்துதும் நாம்அடியோம்
செருவில் அரக்கனைச் சீரில் அடர்த்தருள் செய்தரே
திருவிலித் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம் 8

நாற்ற மலர்மிசை நான்முகன் நாரணன் வாதுசெய்து
தோற்றம் உடைய அடியும் முடியும் தொடர் வரியீர்
தோற்றினுந் தோற்றுந்தொழுதுவணங்குதும் நாம் அடியோம்
சீற்றம தாம்வினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம் 9

சாக்கியப் பட்டுஞ் சமண்உரு வாகி உடைஒழிந்தும்
பாக்கியம் இன்றி இருதலைப் போகமும் பற்றும்விட்டார்
பூக்கமழ் கொன்றைப் புரிசடையீர் அடி போற்றுகின்றோம்
தீக்குழித் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம் 10

பிறந்த பிறவியில் பேணுஎம் செல்வன் கயல் அடைவான்
இறந்த பிறவிஉண்டாகில் இமையவர் கோன் அடிக்கண்
திறம்பயில் ஞானசம் பந்தன் செந்தமிழ் பத்தும்வல்லார்
நிறைந்த உலகினில் வானவர் கோனொடுங் கூடுவரே 11

திருச்சிற்றம்பலம்

குறிப்பு: ஏழாம் பாடல் கிடைக்கவில்லை
இன்று திருச்செங்கோடு என வழங்கும், கொடிமாடச் செங்குன்றூரில் தங்கியிருந்த காலை பாடப்பெற்றது.

கோளறு திருப்பதிகம்

பண்-பியந்தைக் காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளிபங்கன் விடம்உண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்து அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன்வியா ழன்வெள்ளி
சனிபாம்பு இரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே 1

என்பொடு கொம்பொடு ஆமை இவைமார்பு இலங்க
எருதுஏறி ஏழை உடனே
பொன்பொதி மத்த மாலை புனல்சூடி வந்துஎன்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொடு ஒன்றொடு ஏழு பதினெட்டோடு ஆறும்
உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே 2

உருவளர் பவள மேனி ஒளிநீறு அணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமேல்அணிந்துஎன்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலைய தூர்தி செயமாது பூமி
திசைதெய்வம் ஆன பலவும்
அருநெறி நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே 3

மதிநுதல் மங்கை யோடு வடபால் இருந்து
மறைஓதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றை மாலை முடிமேல் அணிந்துஎன்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலன் அங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளான பலவும்
அதிகுண நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே 4

நஞ்சணி கண்டன் எந்தை மடவாள் தனோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேல் அணிந்துஎன்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுண ரோடும் உருமிடியு மின்னு
மிகையான பூதம் அவையும்
அஞ்சிடும் நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே 5

வாள்வரி அதளதாடை வரிகோ வணத்தர்
மடவாள் தனோடும் உடனாய்
நாள்மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்துஎன்
உளமே புகுத்த அதனால்
கோளரி உழுவை யோடு கொலையானை கேழல்
கொடு நாகமோடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே 6

செப்பில முலைநன் மங்கை ஒருபாக மாக
விடையேறு செல்வன் அடைவார்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமேல் அணிந்துஎன்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும் வாத மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே 7

வேள்பட விழிசெய் தன்று விடைமேல் இருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வான்மதி வன்னி கொன்றை மலர்சூடி வந்துஎன்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழ்இலங்கை அரையன் றனோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 8

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமக ளோடு எருக்கு முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனு மாலு மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேரு நல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே 9

கொத்தலர் குழலி யோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியு நாக முடிமேல் அணிந்துஎன்
உளமே புகுந்த அதனால்
புத்தரொடு அமணை வாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்ககு மிகவே 10

தேனமர் பொழில் கொள் ஆலை விளசெந்நெல் துன்னி
வளர்செம் பொன்எங்கும் நிகழ
நான்முகன் ஆதி யாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளு நாளும் அடியா ரைவந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலை ஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே. 11

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசர்

அஞ்செழுத்தின் புணைப்பிடித்தே உழவாரப்
படையேந்தி அரன்தன் நாமம்
நெஞ்சுநிறை ‘சிவாயநம’ எனப்பயின்று
நினைந்தழுது மேனி யெல்லாம்
நஞ்சுமிழும் அரவணிந்தான் திருநீற்றின்
நலம்விளங்க அசைந்த சைந்தே
கொஞ்சுதமிழ்ப் பண்ணிசைத்துக் குழைந்துருகும்
அப்பரிணை அடியே போற்றி!

- கவிச்செம்மல் ரெ.மு.

நமச்சிவாயத் திருப்பதிகம்

பண்–காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே. 1

பூவினுக்கு அருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக்கு அருங்கலம் அரன்அஞ் சாடுதல்
கோவினுக்கு அருங்கலம் கோட்டம் இல்லது
நாவினுக்கு அருங்கலம் நமச்சி வாயவே. 2

விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகில்அவை ஒன்றும் இல்லையாம்
பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை
நண்ணிநின்று அறுப்பது நமச்சி வாயவே. 3

இடுக்கண்பட்டு இருக்கினும் இரந்து யாரையும்
விடுக்கிற் பிரார்என்று வினவுவோம் அல்லோம்
அடுக்கிற்கீழ்க் கிடக்கினும் அருளில் நாம் உற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சி வாயவே. 4

வெந்த நீறு அருங்கலம் விரதி கட்குஎலாம்
அந்தணர்க்கு அருங்கலம் அருமறை ஆறங்கம்
திங்களுக்கு அருங்கலம் திகழு நீள்முடி
நங்களுக்க அருங்கலம் நமச்சி வாயவே. 5

சலம்இலன் சங்கரன் சார்ந்த வர்க்குஅலால்
நலம்இலன் நாள்தோறும் நல்கு வான்நலன்
குலம்இலர் ஆகிலும் குலத்துக்கு ஏற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே. 6

வீடினார் உலகினில் விழுமிய தொண்டர்கள்
கூடினார் அந்நெறி கூடிச் சென்றலும்
ஓடினேன் ஓடிச் சென்றுஉருவம் காண்டலும்
நாடினேன் நாடிற்று நமச்சி வாயவே 7

இல்லக விளக்கது இருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே. 8

முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்
தன்னெறி யேசரண் ஆதல் திண்ணமே
அந்நெறி யேசென்று அங்கு அடைந்த வர்க்குஎலாம்
நன்னெறி யாவது நமச்சி வாயவே. 9

மாப்பிணை தழுவிய மாதொர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்து
ஏத்தவல் தார்தமக்கு இடுக்கண் இல்லையே 10

திருச்சிற்றம்பலம்

திருவாரூர்
போற்றித்திருத்தாண்டகத் திருப்பதிகம்
திருச்சிற்றம்பலம்

கற்றவர்கள் உண்ணும் கனியே போற்றி
கழல்அடைந்தார் செல்லும் கதியே போற்றி
அற்றவர்கட்(கு) ஆரமுதம் ஆனாய் போற்றி
அல்லல் அறுத்(து) அடியேனை ஆண்டாய் போற்றி
மற்றொருவர் ஒப்பில்லா மைந்தா போற்றி
வானவர்கள் போற்றும் மருந்தே போற்றி
செற்றவர்தம் புரமெரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி 1

வங்கமலி கடல் நஞ்சம் உண்டாய் போற்றி
மதயானை ஈருரிவை போர்த்தாய் போற்றி
கொங்கலரும் நறுங்கொன்றைத் தாராய் போற்றி
கொல்புலித்தோல் நல் ஆடைக் குழகா போற்றி
அங்கணனே அமரர்கள் தம் இறைவா போற்றி
ஆலமர நீழலறம் சொன்னாய் போற்றி
செங்கனகத் தனிக்குன்றே சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி 2

மலையான் மடந்தை மணாளா போற்றி
மழவிடையாய் நின்பாதம் போற்றி போற்றி
நிலையாக என் நெஞ்சில் நின்றாய் போற்றி
நெற்றிமேல் ஒற்றைக்கண் உடையாய் போற்றி
இலையார்ந்த மூவிலைவேல் ஏந்தீ போற்றி
ஏழ்கடலும் ஏழ்பொழிலும் ஆனாய் போற்றி
சிலையால் அன்(று) எயிலெரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி 3

பொன்னியலும் மேனியனே போற்றி போற்றி
பூதப் படையுடையாய் போற்றி போற்றி
மன்னியசீர் மறைநான்கும் ஆனாய் போற்றி
மறிஏந்து கையானே போற்றி போற்றி
உன்னுமவர்(கு) உண்மையனே போற்றி போற்றி
உலகுக்(கு) ஒருவனே போற்றி போற்றி
சென்னிமிசை வெண்பிறையாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி 4

நஞ்சுடைய கண்டனே போற்றி போற்றி
நற்றவனே நின்பாதம் போற்றி போற்றி
வெஞ்சுடரோன் பல்லிறுத்த வேந்தே போற்றி
வெண்மதியம் கண்ணி விகிர்தா போற்றி
துஞ்சிருளில் ஆடல் உகந்தாய் போற்றி
தூநீறு மெய்கணிந்த சோதீ போற்றி
செஞ்சடையாய் நின்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி 5

சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி
அங்கமலத்(து) அயனோடு மாலுங் காணா
அனலுருவா நின்பாதம் போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி 6

வம்புலவு கொன்றைச் சடையாய் போற்றி
வான்பிறையும் வாள்அரவும் வைத்தாய் போற்றி
கொம்பனைய நுண்ணிடையாள் கூறா போற்றி
குரைகழலால் கூற்றுதைத்த கோவே போற்றி
நம்புமவர்க்(கு) அரும்பொருளே போற்றி போற்றி
நால்வேதம் ஆறங்கம் ஆனாய் போற்றி
செம்பொனே மரகதமே மணியே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி 7

உள்ளமாய் உள்ளத்தே நின்றாய் போற்றி
உகப்பார் மனத்தென்றும் நீங்காய் போற்றி
வள்ளலே போற்றி மணாளா போற்றி
வானவர்கோன் தோள்துணித்த மைந்தா போற்றி
வெள்ளையே றேறும் விகிர்தா போற்றி
மேலோர்க்கும் மேலோர்க்கும் மேலாய் போற்றி
தெள்ளுநீர்க் கங்கைச் சடையாய் போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி 8

பூவார்ந்த சென்னிப் புனிதா போற்றி
புத்தேளிர் போற்றும் பொருளே போற்றி
தேவார்ந்த தேவர்க்கும் தேவே போற்றி
திருமாலுக்(கு) ஆழி அளித்தாய் போற்றி
சாவாமே காத்தென்னை ஆண்டாய் போற்றி
சங்கொத்த நீற்றெம் சதுரா போற்றி
சேவார்ந்த வெல்கொடியாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி 9

பிரமன்தன் சிரமரிந்த பெரியோய் போற்றி
பெண்ணுருவோ(டு) ஆணுருவாய் நின்றாய் போற்றி
கரநான்கும் முக்கண்ணும் உடையாய் போற்றி
காதலிப்பார்க் காற்ற எளியாய் போற்றி
அருமந்த தேவர்க் கரசே போற்றி
அன்றரக்கன் ஐஞ்ஞான்கு தோளும் தாளும்
சிரநெறித்த சேவடியாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி 10

திருச்சிற்றம்பலம்

திருத்தில்லைத் திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

கருநட்ட கண்டனை அண்டத்
தலைவனைக் கற்பகத்தைச்
செருநட்ட மும்மதில் எய்யவல்
லானைச்செந் தீமுழங்கத்
திருநட்டம் ஆடியைத் தில்லைக்கு
இறையைச் சிற்றம்பலத்துப்
பெருநட்ட ஆடியை வானவர்
கோன் என்று வாழ்த்துவனே 1

ஒன்றி இருந்து நினைமின்கள்
உந்தமக்கு ஊனம்இல்லைக்
கன்றிய காலனைக் காலால்
கடிந்தான் அடியவர்க்காய்ச்
சென்று தொழுமின்கள் தில்லையுள்
சிற்றம் பலத்துநட்டம்
என்று வந்தாய் என்னும்
எம்பெரு மான்தன் திருக்குறிப்பே 2

கன்மனவீர் கழியும் கருத்தே
சொல்லிக் காண்பதுஎன்னே
நன்மனவா நவில்தில்லை யுள்
சிற்றம் பலத்துநட்டம்
பொன்மலையில் வெள்ளிக் குன்றது
போலப் பொலிந்துஇலங்கி
என்மனமே ஒன்றிப் புக்கனன்
போந்த சுவடுஇல்லையே 3

குனித்த புருவமும் கொவ்வைச்செவ்
வாயில் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்
மேனியில்பால் வெண்ணீறும்
இனித்தம் உடைய எடுத்தபொற்
பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவி யும்வேண்டு
வதே, இந்த மாநிலத்தே 4

வாய்த்தது நந்தமக்கு ஈதுஓர்
பிறவி மதித்திடுமின்
பார்த்தற்குப் பாசு பதம் அருள்
செய்தவன் பத்தர்உள்ளீர்
கோத்தறு முப்புரம் தீவளைத்
தான்தில்லை யம்பலத்துக்
கூத்தனுக்கு ஆட்பட்டு இருப்பதுஅன்றோ
நம்தம் கூழைமையே 5

பூத்தன பொற்சடை பொன்போல்
மிளிரப் புரிகணங்கள்
ஆர்த்தன கொட்டி அரித்தன
பல்குறள் பூதகணம்
தேத்தென வென்றிசை வண்டுகள்
பாடு சிற்றம்பலத்துக்
கூத்தனில் கூத்து வல்லார்
உணரோ என்தன் கோல்வளைக்கே 6

முடிகொண்ட மத்தமும் முக்கண்ணின்
நோக்கும் முறுவலிப்பும்
துடிகொண்ட கையும் துதைந்த
வெண்ணீறுஞ் சுரிகுழலாள்
படிகொண்ட பாகமும் பாய்புலித்
தோலும்என் பாவிநெஞ்சில்
குடிகொண்ட வாதில் லையம்
பலக்கூத்தன் குரைகழலே 7

படைக்கலம் ஆகஉன் நாமத்து
எழுத்துஅஞ்சு என்நாவில் கொண்டேன்
இடைக்கலம் அல்லேன் எழுபிறப்பும்
உனக்குஆட் செய்கின்றேன்
துடைக்கினும் போகேன் தொழுது
வணங்கித்தூ நீறுஅணித்துஉன்
அடைக்கலம் கண்டாய்அணிதில்லைச்
சிற்றம் பலத்துஅரனே 8

பொன்ஒத்த மேனி மேல்வெண்
ணீறுஅணிந்து புரிசடைகள்
மின்ஒத்தி இலங்க பலிதேர்ந்து
உழலும் விடங்கர்வேடச்
சின்னத்தினான் மலிதில் லையுள்
சிற்றம் பலத்துநட்டம்
என்அத்தன் ஆடல் கண்டு
இன்புற்ற தால் இவ்விருநிலமே 9

சாட, எடுத்தது தக்கன்
தன்வேள் வியிற் சந்திரனை
வீட எடுத்தது காலனை
நாரண நான் முகனும்
தேட எடுத்தது தில்லையுள்
சிற்றம் பலத்துநட்டம்
ஆடஎடுத்திட்ட பாதம் அன்றோ
நம்மைஆட் கொண்டதே 10

திருச்சிற்றம்பலம்

திருஅண்ணாமலைத் திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

ஓதிமா மலர்கள் தூவி
உமையவள் பங்கா மிக்க
சோதியே துளங்கும் எண்தோள்
சுடர்மழுப் படையி னானே
ஆதியே அமரர் கோவே
அணியணா மலையு ளானே
நீதியால் நின்னை அல்லால்
நினையுமா நினைவு இலேனே 1

பண்டனை வென்ற இன்சொல்
பாவையோர் பங்க நீல
கண்டனே கார்கொள் கொன்றைக்
கடவுளே கமல பாதா
அண்டனே அமரர் கோவே
அணியணா மலையு ளானே
தொண்டனேன் உன்னை அல்லால்
சொல்லுமா சொல்இலேனே 2

உருவமும் உயிரும் ஆகி
ஓதிய உலகுக் கெல்லாம்
பெருவினை பிறப்பு வீடாய்
நின்றஎம் பெருமான் மிக்க
அருவிபொன் சொரியும் அண்ணா
மலையுளாய் அண்டர் கோவே
மருவிநின் பாதம் அல்லால்
மற்றொரு மாடுஇலேனே 3

பைம்பொனே பவளக் குன்றே
பரமனே பால்வெண் ணீறா
செம்பொனே மலர்செய் பாதா
சீர்தரு மணியே மிக்க
அம்பொனே கொழித்து வீழும்
அணியணா மலையு ளானே
என்பொனே உன்னை அல்லால்
ஏதுநான் நினைவு இலேனே 4

பிறையணி முடியி னானே
பிஞ்ஞகா பெண்ஓர் பாகா
மறைவலா இறைவா வண்டார்
கொன்றையாய் வாம தேவா
அறைகழல் அமரர் ஏத்தும்
அணியணா மலையு ளானே
இறைவனே உன்னை அல்லால்
யாதுநான் நினைவு இலேனே 5

புரிசடை முடியின் மேலோர்
பொருபுனல் கங்கை வைத்துக்
கரியுரி போர்வை யாகக்
கருதிய கால காலா
அரிகுல மலிந்த அண்ணா
மலையுளாய் அலரின் மிக்க
வரிமிகு வண்டு பண்செய்
பாதநான் மறப்பு இலேனே 6

இரவியும் மதியும் விண்ணும்
இருநிலம் புனலும் காற்றும்
உரகமார் பவனம் எட்டும்
திசைஒளி உருவம் ஆனாய்
அரவுமிழ் மணிகொள் சோதி
அணியணா மலையு ளானே
பரவுநின் பாதம் அல்லால்
பரமநான் பற்று இலேனே 7

பார்த்தனுக்கு அன்று நல்கி
பாசு பதத்தை ஈந்தாய்
நீர்த்ததும்பு உலாவு கங்கை
நெடுமுடி நிலாவ வைத்தாய்
ஆர்த்துவந்து ஈண்டு கொண்டல்
அணியணா மலையு ளானே
தீர்த்தனே நின்றன் பாதத்
திறம்அலால் திறம் இலேனே 8

பாலுநெய் முதலா மிக்க
பசுவில்ஐந் தாடு வானே
மாலுநான் முகனும் கூடிக்
காண்கிலா வகையுள் நின்றாய்
ஆலுநீர் கொண்டல் பூகம்
அணியணா மலையு ளானே
வாலுடை விடையாய் உந்தன்
மலரடி மறப்பு இலேனே 9

இரக்கம்ஒன்(று) யாதும் இல்லாக்
காலனை கடிந்த எம்மான்
உரத்தினால் வரையை ஊக்க
ஒருவிரல் நுதியி னாலே
அரக்கனை நெரித்த அண்ணா
மலையுளாய் அமரர் ஏறே
சிரத்தினால் வணங்கி ஏத்தித்
திருவடி மறப்பு இலேனே 10

திருச்சிற்றம்பலம்

திரு ஆனைக்கா, திருத்தாண்டகத் திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

முன்னானைத் தோல்போர்த்த மூர்த்தி தன்னை
மூவாத சிந்தையே மனமே வாக்கே
தன்னானை யாப்பண்ணி ஏறி னானைச்
சார்தற்கு அரியானைத் தாதை தன்னை
என்னானைக் கன்றினை என்ஈசன் தன்னை
எறிநீர்த் திரைஉக ளும்கா, விரிசூழ்
தென்னானைக் காவானைத் தேனைப் பாலைச்
செழுநீர்த் திரளைச் சென்றுஆடி னேனே 1

மருந்தானை மந்திரிப்பார் மனத்து உளானை
வளர்மதிஅம் சடையானை மகிழ்ந்துஎன் உள்ளத்து
இருந்தானை இறப்பிலியைப் பிறப்பு இலானை
இமையவர்தம் பெருமானை உமையாள் அஞ்சக்
கருந்தாள மதகளிற்றின் உரிபோர்த் தானைக்
கனமழுவாள் படையானைப் பலிகொண்டு ஊர்ஊர்
திரிந்தானைத் திருஆ னைக்கா உளானைக்
செழுநீர்த் திரளைச் சென்று ஆடினேனே 2

முற்றாத வெண்திங்கள் கண்ணி யானை
முந்நீர் நஞ்(சு) உண்டு இமை யோர்க்கமுதம் நல்கும்
உற்றானைப் பல்லுயிர்க்கும் துணைஆ னானை
ஓங்காரத்(து) உட்பொருளை உலகம் எல்லாம்
பெற்றானைப் பின்னிரக்கம் செய்வான் தன்னைப்
பிரான்என்று போற்றாதார் புரங்கள் மூன்றும்
செற்றானைத் திருஆ னைக்கா உளானைச்
செழுநீர்த் திரளைச் சென்று ஆடி னேனே 3

காராருங் கருமிடற்றெம் பெருமான் தன்னைக்
காதில்வெண் குழையானைக் கமழ்பூங் கொன்றைத்
தாரானைப் புலிஅதளின் ஆடை யானைத்
தான்அன்றி வேறொன்றும் இல்லா ஞானப்
பேரானை மணியார மார்பி னானைப்
பிஞ்ஞகனைத் தெய்வநான் மறைகள் பூண்ட
தேரானைத் திருஆனைக் காஉளானைச்
செழுநீர்த் திரளைச் சென்று ஆடி னேனே 4

பொய்ஏதும் இல்லாத மெய்யன் தன்னைப்
புண்ணியனை நண்ணாதார் புரம்நீறு ஆக
எய்தானைச் செய்தவத்தின் மிக்கான் தன்னை
ஏறுஅமரும் பெருமானை இடமான் ஏந்தும்
கையானைக் கங்காள வேடத் தானைக்
கட்டங்கக் கொடியானைக் கனல்போல் மேனிச்
செய்யானைத் திருஆனை காஉளானைச்
செழுநீர்த் திரளைச் சென்று ஆடி னேனே 5

கலையானைப் பரசுதர பாணி யானைக்
கனவயிரத் திரளானை மணிமா ணிக்க
மலையானை என்தலையின் உச்சி யானை
வார்தருபுன் சடையானை மயானம் மன்னு
நிலையானை வரியரவு நாணக் கோத்து
நினையாதார் புரம்எரிய வளைத்த மேருச்
சிலையானைந் திருஆனைக் காஉளானைச்
செழுநீர்த் திரளைச் சென்று ஆடி னேனே 6

ஆதியனை ஏறிமணியின் ஓசை யானை
அண்டத்தார்க் கறிவொண்ணா தபபால் மிக்க
சேதியனைத் தூமறையின் பொருளான் தன்னைச்
சுரும்பமரும் மலர்க்கொன்றைத் தொன்னூல் பூண்ட
வேதியனை அறம்உரைத்த பட்டன் தன்னை
விளங்கும்மலர் அயன்சிரங்கள் ஐந்தில் ஒன்றைச்
சேதியனைத் திருஆனைக் காஉளானைச்
செழுநீர்த் திரளைச் சென்று ஆடி னேனே 7

மகிழ்ந்தானைக் கச்சி ஏகம்பன் தன்னை
மறவாது கழல் நினைந்து வாழ்த்தி ஏத்திப்
புகழ்ந்தாரைப் பொன்னுலகம் ஆள்விப் பானைப்
பூதகணப் படையானைப் புறங்காட்டு ஆடல்
உகந்தானைப் பிச்சையே இச்சிப் பானை
ஒண்பவளத் திரளை என் உள்ளத்துள்ளே
திகழ்ந்தானைத் திருஆனைக் காஉளானைச்
செழுநீர்த் திரளைச் சென்று ஆடி னேனே 8

நசையானை நல்வேதத் தப்பா லானை
நல்குரவும் தீப்பிணிநோய் காப்பான் தன்னை
இசையானை எண்ணிறந்த குணத்தான் தன்னை
இடைமருதும் ஈங்கோயும் நீங்காது ஏற்றின்
மிசையானை விரிகடலும் மண்ணும் விண்ணும்
மிகுதீயும் புனல்எறிகாற் றாகி எட்டுத்
திசையானைத் திருஆனைக் காஉளானைச்
செழுநீர்த் திரளைச் சென்று ஆடி னேனே 9

பார்த்தானைக் காமன்உடல் பொடியாய் வீழப்
பண்டுஅயன் மால்இருவர்க் கும்அறியா வண்ணம்
சீர்த்தானைச் செந்தழல்போல் உருவி னானைத்
தேவர்கள் தம்பெருமா னைத்திறம் உனாதே
ஆர்த்தோடி மலையெடுத்த இலங்கை வேந்தன்
ஆண்மை எலாங்கெடுத்து அவன்தன் இடர் அப்போதே
தீர்த்தானைத் திருஆனைக் காஉளானைச்
செழுநீர்த் திரளைச் சென்று ஆடி னேனே 10

திருச்சிற்றம்பலம்

திருக்காளத்தி திருத்தாண்டகத் திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

விற்றூண்ஒன் றில்லாத நல்கூர்ந் தான்காண்
வியன்கச்சிக் கம்பன்காண் பிச்சை அல்லான்
மற்றூண்ஒன் றில்லாத மாசது ரன்காண்
மயானத்து மைந்தன்காண் மாசொன்று இல்லாப்
பொற்றூண்காண் மாமணி நற்குன்று ஒப்பான்காண்
பொய்யாது பொழில்எழும் தாங்கி நின்ற
கற்றூண்காண் காளத்தி காணப் பட்ட
கணநாதன் காண்அவன் என் கண்ணு ளானே 1

இடிப்பான்காண் என்வினையை ஏகம் பன்காண்
எலும்பா பரணன்காண் எல்லாம் முன்னே
முடிப்பான்காண் மூஉலகும் ஆயி னான் காண்
முறைமையால் ஐம்பொறியும் வழுவா வண்ணம்
படித்தான் தலையறுத்த பாசு பதன்காண்
பராய்த்துறையான் பழனம் பைஞ்ஞீலி யான்காண்
கடித்தார் கமழ்கொன்றைக் கண்ணி யான்காண்
காளத்தியா னவன் என் கண்ணு ளானே 2

நாரணன்காண் நான்முகன்காண் நால்வே தன்காண்
ஞானப் பெருங் கடற்கோர் நாவாய் அன்ன
பூரணன்காண் புண்ணியன்காண் புராணன் தான்காண
புரிசடைமேல் புனல்ஏற்ற புனிதன் தான்காண்
சாரணன்காண் சந்திரன்காண் கதிரோன் தான்காண்
தன்மைக்கண் தானேகாண் தக்கோர்க்கு எல்லாம்
காரணன்காண் காளத்தி காணப் பட்ட
கணநாதன் காண் அவன் என் கண்ணு ளானே 3

செற்றான்காண் என்வினையைத் தீயா டிகாண்
திருஒற்றி யூரான்காண் சிந்தை செய்வார்க்கு
உற்றான்காண் ஏகம்பம் மேவி னான்காண்
உமையாள்நல் கொழுநன்காண் இமையோர் ஏத்தும்
சொற்றான்காண் சோற்றுத் துறையு ளான்காண்
சுறாவேந்தன் ஏவலத்தை நீறா நோக்கக்
கற்றான்காண் காளத்தி காணப் பட்ட
கணநாதன் காண்அவன் என் கண்ணு ளானே 4

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கின் உள்ளான்
வாயாரத் தன்அடியே பாடும் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தம் சிரத்தின் மேலான்
ஏழ்அண்டத் தப்பாலான் இப்பால் செம்பொன்
புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதின் உள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றின் உள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத்(து) உச்சி உள்ளான்
காளத்தி யானவன் என் கண்ணு ளானே 5

எல்லாமுன் தோன்றாமே தோன்றி னான்காண்
ஏகம்பம் மேயான்காண் இமையோர் ஏத்தப்
பொல்லாப் புலன்ஐந்தும் போக்கி னான்காண்
புரிசடைமேல் பாய்கங்கை பூரித் தான்காண்
நல்லவிடை மேற்கொண்டு நாகம் பூண்டு
நளிர்சிரம்ஒன் றேந்திஓர் நாணாய் அற்ற
கல்லாடை மேற்கொண்ட காபா லிகாண்
காளத்தி யானவன் என் கண்ணு ளானே 6

கரியுருவு கண்டத்தன் கண்ணு ளான்காண்
கண்டன்காண் வண்டுண்ட கொன்றை யான்காண்
எரிபவள வண்ணன்காண் ஏகம் பன்காண்
எண்திசையும் தானாய குணத்தி னான்காண்
திரிபுரங் கள்தீ யிட்டதீ ஆடிகாண்
தீவினைகள் தீர்த்திடும் என்சிந்தை யான்காண்
கரியுரிமெய் போர்த்துஉகந்தகா பாலிகாண்
காளத்தி யானவன் என் கண்ணு ளானே 7

இல்ஆடிச் சில்பலி சென்றுஏற் கின்றான்காண்
இமையவர்கள் தொழுதிறைஞ்ச இருக்கின்றான்காண்
வில்ஆடி வேடனாய் ஓடி னான்காண்
வெண்ணூலும் சேர்ந்த அகலத் தான்காண்
மல்ஆடு திரள்தோள்மேல் மழுவா ளன்காண்
மலைமகள் தன் மணாளன்காண் மகிழ்ந்து முன்னாள்
கல்ஆலின் கீழ்இருந்தகாபா லிகாண்
காளத்தி யானவன் என் கண்ணு ளானே 8

தேனப்பூ வண்டுண்ட கொன்றை யான்காண்
திருவேகம் பத்தான்காண் தேன்ஆர்ந்து உக்க
ஞானப்பூங் கோதையாள் பாகத் தான்காண்
நம்பன்காண் ஞானத்து ஒளியா னான்காண்
வானப்பேர் ஊரும் அறிய ஓடி
மட்டித்து நின்றான்காண் வண்டார் சோலைக்
கானப்பேர் ஊரான்காண் கறைக்கண் டன்காண்
காளத்தி யான்அவன் எண்ணு ளானே 9

இறையவன்காண் ஏழுலகம் ஆயி னான்காண்
ஏழ்கடலும் சூழ்மலையும்ஆயி னான்காண்
குறையுடையார் குற்றேவல் கொள்வான் தான்காண்
குடமூக்கில் கீழ்க்கோட்டம் மேவி னான்காண்
மறையுடைய வானோர் பெருமான் தான்காண்
மறைக்காட்டு உறையும் மணிகண் டன்காண்
கறையுடைய கண்டத்துஎம் காபா லிகாண்
காளத்தி யான்அவன் என் கண்ணு ளானே 10

உண்ணா அருநஞ்சம் உண்டான் தான்காண்
ஊழித்தீ அன்னான்காண் உகப்பார் காணப்
பண்ணாரப் பல்இயம் பாடி னான்காண்
பயின்ற நால்வேதத்தின் பண்பி னான்காண்
அண்ணா மலையான்காண் அடியார் ஈட்டம்
அடியிணைகள் தொழுதேத்த அருளு வான்காண்
கண்ணாரக் காண்பார்கோர் காட்சி யான்கண்
காளத்தி யான்அவன் என் கண்ணு ளானே 11

திருச்சிற்றம்பலம்

சுந்தரர்

வேதத்தின் உட்பொருளாய் விளங்கிஅவ்
வேதங்கள் பரவ நின்ற
பாதத்தால் நடந்தேகிப் பரவையர்பால்
தூதுரைத்தோன் அருளைப் பெற்றோன்;
நாதத்தின் ஒலிவழியே நாயகனைத்
தோழனுமாய்க் கண்ட யோகி
போதத்தன் திருநாவல் சுந்தரன்தன்
பொற்றாளைப் போற்றி செய்வோம்!

- கவிச்செம்மல் ரெ.மு.

நமச்சிவாயத் திருப்பதிகம்
(திருப்பாண்டிக் கொடுமுடி)
திருச்சிற்றம்பலம்

மற்றுப்பற் றெனக்கின்றி நின்திருப்
பாத, மேமனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேன் இனிப்பிற
வாத தன்மைவந் தெய்தினேன்
கற்றவர் தொழுதேத்துஞ் சீர்க்கறை
ஊரிற் பாண்டிக் கொடுமுடி
நற்றவா ! உனைநான் மறக்கினும்
சொல்லு நாநமச் சிவாயவே 1

இட்டநுன் அடிஏத்து வார் இகழ்ந்
திட்ட, நாள்மறந் திட்டநாள்
கெட்டநாள் இவையென் றலாற்கரு
தேன்கி ளர்புனற் காவிரி
வட்டவா சிகைகொண்டு அடிதொழு
தேத்து பாண்டிக் கொடுமுடி
நட்டவா ! உனைநான் மறக்கினும்
சொல்லு நாநமச் சிவாயவே 2

ஓவுநாள் உணர்வழியு நாள்உயிர்
போகு நாள்உயர் பாடைமேல்
காவுநாள் இவையென் றலாற்கரு
தேன்கி ளற்புனற் காவிரிப்
பாவுதண் புனல்வந் திழிபரஞ்
சோதி, பாண்டிக், கொடுமுடி
நாவலா ! உனைநான் மறக்கினும்
சொல்லும் நாநமச் சிவாயவே 3

எல்லையில் புகழ்எம் பிரான்எந்தை
　　தம்பிரான் என்பொன் மாமணி
கல்லையுந் திவளம் பொழிந்திழி
　　காவிரிய தன் வாய்க்கரை
நல்லவர் தொழுதேத்தும் சீர்க்கறை
　　ஊரிற் பாண்டிக் கொடுமுடி
வல்லவா ! உனைநான் மறக்கினும்
　　சொல்லும் *நாநமச் சிவாயவே* 4

அஞ்சினோர்க்கு அரணாதி யென்றடி
　　யேனும் நான்மிக அஞ்சினேன்
அஞ்சல்என் அடித்தொண் டனேற்கருள்
　　நல்கினாய்க்கு அழிகின்றதென்
பஞ்சின்மெல் லடிப்பாவை மார்குடைந்து
　　ஆடுபாண்டிக் கொடுமுடி
நஞ்சணிகண்ட ! நான் மறக்கினும்
　　சொல்லு *நாநமச் சிவாயவே* 5

ஏடுவான் இளந்திங் கள்சூடினை
　　என்பின் கொல்புலித் தோலின்மேல்
ஆடும்பாம் பதுஅரைக் கசைத்த
　　அழகனே! அந்தண் காவிரிப்
பாடுதண் புனல்வந்தி ழிபரஞ்
　　சோதி பாண்டிக் கொடுமுடிச்
சேடனே! உனைநான் மறகினும்
　　சொல்லு *நாநமச் சிவாயவே* 6

விரும்பிநின் மலர்ப்பாத மேநினைந்
　　தேன்வி னைகளும் விண்டனன்
நெருங்கிவண் பொழில்சூழ்ந்து எழில்பெற
　　நின்ற காவிரிக் கோட்டிடைக்
குரும்பைமென் முலைக்கோதை மார்குடைந்து
　　ஆடுபாண்டிக் கொடுமுடி
விரும்பனே! உனைநான் மறக்கினும்
　　சொல்லு *நாநமச் சிவாயவே* 7

செம்பொன் நேர்சடை யாய்திரிபுரஞ்
தீயெழச் சிலை கோலினாய்
வம்பு லாங்குழலா ளைப்பாகம்
அமர்ந்து காவிரிக் கோட்டிடைக்
கொம்பின் மேற்குயில் கூவமாமயில்
ஆடுபாண்டிக் கொடுமுடி
நம்பனே ! உனைநான் மறக்கினும்
சொல்லு *நாநமச் சிவாயவே* 8

சாரணன் தந்தைஎம் பிரான்எந்தை
தம்பிரான் என்பொன்மா மணியென்று
பேர்எண் ஆயிரம் கோடிதேவர்
பிதற்றி நின்று பிரிகிலார்
நாரணன் பிரமன்தொ ழுங்கறை
ஊரிற் பாண்டிக் கொடுமுடி
காரணா! உனைநான் மறக்கினும்
சொல்லு *நாநமச் சிவாயவே* 9

கோணிய பிறைசூ டியைக்கறை
ஊரிற்பாண்டிக் கொடுமுடி
பேணிய பெருமானைப் பிஞ்ஞகப்
பித்தனைப் பிறப் பில்லியைப்
பாணுலா வரிவண்ட றைகொன்றைத்
தாரனைப் படப் பாம்பரை
நாணனைத் தொண்டனூ ரன்சொல்லிவை
சொல்லு வார்க்கில்லை துன்பமே 10

திருச்சிற்றம்பலம்

திருத்தொண்டத் தொகைத் திருப்பதிகம்

பண்-கொல்லிக் கௌவாணம்

திருச்சிற்றம்பலம்

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும்அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க்கும் அடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக்கும் அடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் வியன்மிண்டற் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்(கு) ஆளே 1

இலைமலிந்த வேல்நம்பி எறிபத்தர்க்கும் அடியேன்
ஏனாதி நாதன்தன் அடியார்க்கும் அடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பற்கும் அடியேன்
கடவூரின் கலையன்தன் அடியார்க்கும் அடியேன்
மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ் சாறன்
எஞ்சாத வாட்டாயன் அடியார்க்கும் அடியேன்
அலைமலிந்த புனல்மங்கை ஆனாயர்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்(கு) ஆளே 2

மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் அடியேன்
முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன்
செம்மையே திருநாளைப் போவார்க்கும் அடியேன்
திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன்
மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்(கு) ஆளே 3

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்தன் அடியார்க்கும் அடியேன்
பெருநம்பி குலச்சிறைதன் அடியார்க்கும் அடியேன்
பெருமிழலைக் குறும்பர்க்கும் பேயார்க்கும் அடியேன்
ஒருநம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்
ஒலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கற்கும் அடியேன்
அருநம்பி நமிநந்தி அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்(கு) ஆளே. 4

வம்பறா வரிவண்டு மணம்நாற மலரும்
மதுமலாநற் கொன்றையான் அடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்
ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்
நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்
நாட்டமிகு தண்டிக்கும் மூர்க்கற்கும் அடியேன்
அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்(கு) ஆளே. 5

வார்கொண்ட வனமுலையாள் உமைபங்கன் கழலே
மறவாது கல்எறிந்த சாக்கியருக்கும் அடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன்
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டற்கும் அடியேன்
கார்கொண்ட கொடைகழறிற் றறிவார்க்கும் அடியேன்
கடற்காழிக் கணநாதன் அடியார்க்கும் அடியேன்
ஆர்கொண்ட வேல்கூற்றன் களந்தைக்கோன் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்(கு) ஆளே. 6

பொய்யடிமை இல்லாத புலவர்க்கும்அடியேன்
பொழில்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழற்கும் அடியேன்
மெய்யடியான் நரசிங்க முனை அரையற்கும் அடியேன்
விரிதிரைசூழ் கடல்நாகை அதிபத்தற்கும் அடியேன்
கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழற்சத்தி வரிஞ்சையற்கோன் அடியார்க்கும் அடியேன்
ஐயடிகள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்(கு) ஆளே. 7

கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண் டிருந்த
கணம்புல்ல நம்பிக்கும் காரிக்கும் அடியேன்
நிறைகொண்ட சிந்தையான் நெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்
துறைகொண்ட செம்பவளம் இருளகற்றும் சோதித்
தொன்மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன்
அறைக்கொண்ட வேல்நம்பி முனையடுவார்க் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்(கு) ஆளே. 8

கடல்சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி இடங்கழிக்கும் தஞ்சை
மன்னவனாம் செருத்துணைதன் அடியார்க்கும் அடியேன்
புடைசூழ்ந்த புலிஅதன்மேல் அரவாட ஆடி
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்துணைக்கும்
அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்(கு) ஆளே. 9

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதும் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியர்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்(கு) ஆளே. 10

மன்னியசீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்
தென்னவனாய் உலகாண்ட செங்கணார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துப் பாணனார்க்கும் அடியேன்
என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவ லூர்கோன்
அன்னவனாம் ஆரூரன் அடிமைகேட் டுவப்பார்
ஆரூரில் அம்மானுக்(கு) அன்பர்ஆ வாரே 11

திருச்சிற்றம்பலம்.



கிருஷ்ணா பிரஸ், காரைக்குடி
✆ 220465 (O), 220472 (R)